1973 நவம்பர் 24]

*Tourist Project between Mahabalipuram and Kovalam*

@ *70. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any financial assistance has been sought for under the United Nations Development Programme for a tourist project between Mahabalipuram and Kovalam; and

(*b*) if so, the details thereof?

மாமல்லபுரம்-கோவளம் ஆகியவற்றிற்கிடையே சுற்றுலாத் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாமல்லபுரம்-கோவளம் ஆகியவற்றிற்கிடையே சுற்றுலாத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதி உதவி ஏதும் கோரப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) இப்பகுதியை மேம்படுத்த நிதியுதவி அளிக்குமாறு மாநில அரசு இந்திய அரசினை வலியுறுத்தி வந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டக் குழுவின் அறிக்கையைப் பொறுத்து இதற்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

*Watchmen in Tourist Bungalows*

*94. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of persons who are employed as watchmen in Tourist Bungalows in our State;

(*b*) the number among them have not yet been confirmed;

(*c*) for how long they have not been confirmed; and

(*d*) the action proposed to be taken by the Government regarding them?

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.